DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -205/2025

Prosecution PW -3

| | | |
|---|---|---|
| Name | திரு.கழனியப்பன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 25.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A2,A3,A5 present. Accused A1,A4 absent. 355 BNSS petition filed and allowed.

(This evidence is recorded through Video Conference by using Teams Application. The witness is being in the remote site at Principal District Court, Mayiladuthurai and who is co-ordinated by the Thiru.Rajkamal, System Analysist, Cheif Principal District Court, Mayiladuthurai and this court is satisfied that the witness is not at all tutored by any body. The witness is identified by police. The Co-ordinator is directed to download this depostion and to get signed by the witness and the co ordinater and the original shall be returned to this court through post and the scanned and signed deposition shall be sent to the court's e – mail ID)

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.02.2020 ம் தேதி தஞ்சாவூர் தாலுகா காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்தபோது, மதியம் 12.00 மணியளவில் என்னுடன் உதவி ஆய்வாளர் பார்த்தசாரதி, சிறப்பு உதவி ஆய்வாளர் முத்துவேல், தலைமைக்காவலர் கருணாகரன் ஆகியோருடன் குற்றத்தடுப்பு சம்பந்தமாக தஞ்சாவூர் தாலுகா காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து அலுவலில் இருந்தபோது, எனது இரகசியத் தகவலாளி சூரக்கோட்டை சிவன் கோவில் பின்புறம் 5 பேர் பயங்கர ஆயுதங்களுடன் வட்டமாக உட்கார்ந்து கொண்டு ஏதோ கொள்ளையடிக்க திட்டம்

தீட்டுவதாக தெரியவருவதாக கூறிய தகவலின் பேரில் நான் போலிஸ் பார்ட்டியுடன் 12.00 மணிக்கு சம்பவ இடமான சூரக்கோட்டை சிவன் கோவில் பின்புறம் சென்று கண்காணித்தபோது அங்கு 5 நபர்கள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு பயங்கர ஆயுதங்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள் அவர்கள் பேசியதை நாங்கள் கவனிக்க, சூரக்கோட்டை ராஜாவைப் பாதுகாக்க பணம் வேண்டும் எங்காவது கொள்ளையடித்தாவது அந்த பணத்தை வைத்து அவருக்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று பேசி திட்டமிட்டுக் கொண்டிருந்தவர்களை சுற்றி வளைத்து பிடிக்க அவர்கள் 2 அருவாள், 1 வாள் , 1 கம்பி, 1 கட்டைஆகிய கொடிய ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்களுடைய பெயர் முகவரியை விசாரிக்க அடிக்கடி குற்ற செயல்களில் ஈடுபடும் கார்த்திக், இசக்கிமுத்துபாண்டியன், ராஜபாண்டி, விக்னேஷ், சாமிநாதன் என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள். அவர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து பின்னர் எதிரிகள் மற்றும் தடயத்துடன் 13.30 மணிக்கு நிலையம் வந்து நிலையக் குற்றஎண். 27/2020 இதச பிரிவு 399 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல்தகவல்அறிக்கை அதசாஆ**.2**. பின்னர் 1 வது எதிரி கார்த்திக் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முத்துவேல், கருணாகரன் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் வைத்திருந்த தடயப்பொருள்களை அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல்மகசர் ஏற்கனவே அதசாஆ.1 ஆகவும், தடயப்பொருள்கள் சா.பொ.1 முதல் 4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் 16.00 மணிக்கு மீண்டும் சம்பவ இடம் சென்று தனிநபர் சாட்சிகள் ராமலிங்கம், தனலெட்சுமி முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் அதசாஆ**.3.** மாதிரி வரைபடம் அதசாஆ**.4.** பின்னர் எதிரிகள் மற்றும் தடயச்சொத்தினை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் பார்த்தசாரதி, முததுவேல், கருணாகரன், ராமலிங்கம், தனலெட்சுமி ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இத்துடன் என் விசாரணையை முடித்து 1 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவு 399 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சம்பவம் குறித்து அ.சா.2 தனலெட்சுமி வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

இரகசியத் தகவல் மதியம் 11.45 மணிக்கு கிடைத்தது. இரகசியத் தகவல் கிடைக்கும் போது நான் கீழவஸ்தா சாவடி பகுதியில் ரோந்தில் இருந்தேன். ஒப்புதல்

வாக்குமூலம் 12.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளை 12.00 மணிக்கு கைது செய்தேன் என்றால் சரிதான். கைது அறிவிப்பை காவல் நிலையத்தில வைத்து தயாரித்தேன். கைது அறிவிப்பில் சாட்சிகளின் கையொப்பம் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் எதிரிகளின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியிடமிருந்து தான் அனைத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். ஆயுதங்களின் அளவுகளை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை சொன்ன, நாள், நேரம் இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும், எதிரிகள் எந்தவித ஆயுதங்களையும் வைததிருக்கவில்லை என்றாலும், கொள்ளயடிக்க திட்டமிடவில்லை என்றாலும், எதிரிகள் மீது புள்ளிவிவர கணக்கிற்காக பொய் வழக்கு போட்டு அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட (ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்